உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰௯	சுபானு—வைகாசி 1943—மே	மலர் ௨

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

ஒரு அறிவிப்பு

தமிழ் நாட்டின் பெரும்பேறுகளாக விளங்கும் மாபெரும் மடங்களில் ஒன்றாகிய திருப்பனந்தாள் மடத்தின் அரும் பெருஞ் செயல் ஒன்று இங்கே காணப்பெறுவது. இம்மடத்தின் மா பெருந்தலைவர், தமிழ்த்தாயின் தவப் பெருஞ் செல்வர், அருட்டிருவாளர் சுவாமிகள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வித்துவான் தேர்ச்சிப் பரிசாக ஓராயிர ரூபா ஆண்டு தோறும் அளித்து வரும் பேரருள் உலகெலாம் உணர்ந்ததாகும். இதுபோதுள்ள, அம்மடத்தின் அருள் அறிவிப்பு, பின்வருவது:-

"ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபரசுவாமிகள் ஞாப கார்த்த சைவ சித்தாந்த சாத்திரப் பரிசு" "ரூ. 1000 ஆயிரம்". "விபரங்களுக்கு—தஞ்சாவூர் சில்லா திருப்பனந்தாள் காசி மடத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்."

"பரிசுக்குரிய எண்டௌமெண்டு, அண்ணாமலை யூனிவர்ஸிட்டி ஸிண்டிகேட், செனட் மீட்டிங்குகளில் முறையே 30—1—43, 27—3—43 தேதிகளில் அங்கீகாரம் பெற்றிருக்கிறது."

தமிழறிஞர்கள் இப்பரிசுத் தேர்ச்சிக்கு விரைந்து முன் வருவார்களாக.

மதிப்புரை

மணிமேகலை ஆராய்ச்சி. சீவக சிந்தாமணி ஆராய்ச்சி.

திருப்பதி, தமிழ் நாட்டுக்கலை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆசிரியர், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களது தமிழ்ப் புலமையும், ஆராய்ச்சித் திறமையும் புலவர் உலகம் நன்கறிந்தனவாகும். இவை ஒருங்குகூடி மேற்காணும் ஆராய்ச்சி நூல்களாக உருப்பெற்றிருக்கின்றன.

ஒரு நூலைச் செய்யுட்சுவை அளவில் ஓர்ந்து செல்லும் பொதுப் பயிற்சி நெறி வேறு; அச்சுவையோடு ஆராய்ச்சி நெறிக்குரிய பற்பல வகைகளையும் உட்கொண்டு, ஆங்காங்குக் காணலாகும் குறிப்புக்களைத் திரட்டிச் செல்லும் ஆராய்ச்சிப் பயிற்சி நெறி வேறு. இந்நெறியில் பழகித் தேர்ந்தோராகிய திரு. பிள்ளையவர்கள் இவ்விரு தமிழ்ப் பெருங்காப்பியங்களையும் நன்கு ஆய்ந்து, பற்பல தலைப்புக்களையுடைய பொருளடக்கம் கொண்ட அரிய ஆராய்ச்சி நூல்களை எழுதி முடித்தது பெரிதும் பாராட்டற்குரிய செயலாகும்.

மணிமேகலையாராய்ச்சி நூலில், நூலாசிரியர் வரலாறு, அவரது ஏனைச் செய்யுட்கள், அவற்றின் ஆராய்ச்சி, மணிமேகலை நூல், நூற்புணர்ப்பு, நூலிற்காணும் மக்களது குணஞ் செயல்கள், நூலிற் காணும் பிற வரலாறுகள், தருக்க முடிபு, நூல் நயம் காண்டல் முதலாய பல பொருட்பிரிவுகள், செவ்விதின் ஆய்ந்தெழுதப்பட்டுள்ளன. சிந்தாமணியிலும் இங்ஙனமே இருபது அரிய பிரிவுகளில் ஆராய்ச்சியுரை சென்றுளது. இவை மிகப் பாராட்டத்தக்கன.

ஆராய்ச்சியுரைகளின் தனிச்சிறப்புக்களில் ஒன்று, ஒரு தலைவனது, ஒரு நூலினது, ஒரு உரையினது பொதுவியல் சிறப்பியல்களாய குண வேறுபாடுகளை, முன்னொடு பின் ஒப்புநோக்கி எடுத்துக் காட்டுவது. இந்நெறி ஆங்கில ஆராய்ச்சி நூல்களிலெல்லாம் பெரிதுங் காணப்படுவது. இந்நெறியிலும் இவ்வாராய்ச்சியுரைகள் சென்றிருத்தல் மிகப் பாராட்டற்குரியது.

இத்தகைய சிறப்புக்கள் மல்கிய இவ்விரு ஆராய்ச்சி நூல்களும், கல்லூரி மாணவர்கட்குப் பெரிதும் பயன்படுவன; ஆராய்ச்சி அறிவை வளர்ப்பன, தமிழுலகத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பன. இவையிற்றைத் தமிழ்த்தாய்க்கு அணிவித்துத் தமிழகத்திற்குப் பேருதவி செய்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குப் பொழிலின் வாழ்த்து உரியதாகும்.

ஔவையார் திருவுள்ளம்.

ஔவையார் இயற்றிய இனிய சிறிய நீதி நூல்களை, பள்ளி மாணவர்கட்கு, கல்லூரி மாணவர்கட்குப் பாடம் வைக்கவேண்டும்; அதற்கேற்றவாறு அவற்றை விரித்துத் தருக எனத்தமிழ் ஆசிரியர்கட்கு ஒரு போட்டிப் பரிசு வைப்பின், அதில்முதற்பரிசு பெறுவதுபோலும் இந்நூல். நூலைத் திறந்தபோது இதன் பொருளடக்கம் காணப்பட்டது. அங்கு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்ற நான்கு வரிகளே காணப்பட்டன. உள்ளே செல்லச் செல்ல, இளைய அழகிய இந்நூல்களை நம் இளவழகனார் மிகமிக அழகுபடுத்தி விரிக்கும் நெறிகள், வியப்பினையும் மகிழ்ச்சியினையும் அளவின்றித் தருகின்றன!

இந்நூலின் அழகிய பொருட்போக்கினை யெல்லாம் இச்சிறிய இடத்தே எழுதுதல் இயலாததாகும். தமது நூல்களை இங்ஙனம் அழகுபெற விரித்ததனைக் காணும் ஔவையார் திருவுள்ளம், எனது செல்வன், இளவழகன் என்றென்றும் இளவழகனுக! எல்லா நலங்களும் பெற்று நீடு வாழ்க! என்று வாழ்த்தும் எண்ணத்தால் மகிழ்வுற்றிருக்கும் என்பது திண்ணம்

தொல்காப்பியம் (மூலம்)

விரிந்த தொல்காப்பியக் கடலை விளக்கக் குறிப்புக்களுடன், புலவர் கல்லூரி மாணவர் போன்ருர், தம் உள்ளத்தில் இனிது கொள்ளுமாறு, என்றும் தம் கையகத்தோ, மெய்ப்பையின் குறிய பையகத்தோ கொண்டிருக்கச் சுருக்கித் தருக என்ற போட்டிப் பரிசில் முதற்பரிசு பெறுவது போலும் இந்நூல். இயற்பாக்களை (சூத்திரங்களை) எளிதிற் பொருளுணரப் பிரித்திருக்கும் முறை, அவற்றின் மேலே காணும் தலைப்புக்கள், கீழேயுள்ள விளக்கவுரைக் குறிப்புக்கள் — இவையாவும் பொருளுணர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன. இதனை இயற்றினரும் திரு. இளவழகனாரே.

இந்நூலின் தலைபணியாக விளங்குவது பலவகை ஆராய்ச்சிகளையும் அறிவுறாஉக்களையும் கொண்ட மதிப்புரையாகும்.

இவ்விரு நூல்களையும் வெளியிட்டுத் தமிழுலகத்திற்குப் பேருதவியும் தமிழ்த் தாய்க்குச் சிறந்த அணிகளும் இயற்றிய அக்கழகத்தார்க்குப் பொழிலின் வாழ்த்து உரியதாகும்.

குண்டலகேசி அகவல்

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி, பண்டைத் தமிழரின் வாழ்வாகி நின்று, இப்பால் மறைந்த நற்பேறுகளுள் ஒன்றாகும். அதனை நம் தமிழ்நாட்டுப் பெரியார், உயர்திரு. சுத்தானந்த பாரதியார் ஆய அடிகள், அகவல் அடிகளில் இயற்றியிருக்கின்றார்கள். அடிகளார் இயற்றிய அடிகளின் பெருமையை, எடுத்துக்காட்டுதல் எளியதொன்றன்று! இந்நூல், தீந்தேன் ஒழுக்கு, தெண்ணரம் பின்னொலி! செழுமலர் நாற்றம், முழுமதிக் காட்சி! தென்றற் சிறுகால், என்றிசைப் பதுவே! இதனை வெளியிட்ட பேரறங் கொண்ட இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தார், அடிகள் இயற்றிய வளையாபதியினையும் விரைந்து வெளியிட்டுப் பேரறமும் பெரும் புகழும் எய்துவார்களாக.

தஞ்சை 'சில்லா' தமிழிசை மாநாடு.

இம்மாநாடு 25, 26—4—43-ல், கும்பகோணத்தில், வாணி விலாச சபை, கொடைவள்ளல் செட்டிநாட்டரசர், இராசா, சர். அண்ணுமலைச் செட்டியார் மண்டபத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்து இசைக்கலையின் பேராசிரியர், திரு. P. சாம்பமூர்த்தி ஐயரவர்கள் B.A., B.L., இராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார் அவர்கள், B.A., B.L., இவர்கள் தலைமையில் மிகு சிறப்பாக நிகழ் வுற்றது.

மாநாட்டிற்குத் தமிழ் நாட்டின் பல்வேறிடங்களி லிருந்தும் பெரியார்கள் பற்பலர் வந்திருந்தனர். மாநாட்டுத் தலைவர், வரவேற்புக் கழகத் தலைவர்கள், திறப்பாளர், விரிவுரை யாளர்கள் ஆய இவர்கள் விரிவுரைகளும், சிறந்த இசைவாணர் களது தமிழிசைகளும் இனிது நிகழ்ந்தன. இவ்விரு நாளும் தமிழ்நாடெங்கணுமுள்ள சிறந்த இசைப்புலவர்களாகிய ஆண், பெண் இருபாலாரும், தமிழகத்து இசைக்கருவிகளாலும், தமி ழிசையாய வாய்ப்பாட்டுக்களாலும் செவி விருந்து செய்து மகிழ் வித்தனர். இவ்விரு நாட்களிலும் அண்ணுமலைப் பல்கலைக் கழகப்புலவர், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., B.L. (திறப்புரை) இசைப்புலவர், T. N. இராசரத்தினம் பிள்ளை யவர்கள் (வரவேற்புரை) சென்னைப் பல்கலைக் கழகத்து இசைப் புலவர், திரு. P. சாம்பமூர்த்தி ஐயரவர்கள், B A., B.L., (தலைமை யுரை) திரு. குமாரராசா, சர். முத்தையாச் செட்டியாரவர்கள், தமிழ்வீரர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், வேலூர். திரு. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார் அவர்கள் (விரிவுரைகள்) டாக்டர், திரு. P. சுப்பராயன் அவர்கள், (திறப்புரை) திரு. ஒளிமதி, S. இராமாமிர்த உடையார் அவர்கள் (வரவேற்புரை) இராவ் பகதூர் திரு. பி. சம்பந்த முதலியார் அவர்கள் B.A., B.L., (தலை மையுரை) தஞ்சை நாட்டாண்மைக்கழகத் தலைவர், திரு. வி. நாடிமுத்துப் பிள்ளையவர்கள் (விரிவுரை) ஆய இவர்கள் அரிய விரிவுரைகள் நிகழ்ந்தன.

அங்கு நிகழ்ந்த விரிவுரைகளெல்லாம் நிகழ்ந்தவாறே, செட்டிநாடு, விடுதலை என்னும் சிறந்தசெய்தித்தாள்கள் முதலிய வற்றில் வெளிவந்துள்ளன. அவ்விரிவுரைகளின் குறிப் புக்கள் சில :—தஞ்சை சில்லா, குடந்தை இவற்றின் தொன்று தொட்ட இசைச் சிறப்புக்கள். தமிழிசை இயக்கம் தமிழிசை யை வளர்க்கவே தோன்றியது ; வேறெதனையும் குறைக்கவோ அழிக்கவோ தோன்றியதன்று. இதனை உணராதோர் நெடிது எதிர்த்து வந்தனர்; அதனுல் இவ்வியக்கம் சோர்வுருது கிளர்ச்சி

யுற்றெழுந்தது. இவ்வியக்கம் நிலைபெற்றுயர ஓரிடத்து ஒரு பெருங் கழகமும் ஆங்காங்கு அதன் கிளைகளும் தோன்றல் வேண்டும். தமிழிசையே பொருளுணர்ச்சியொடு கூடிச் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் தருவது. பொருளுணர்ச்சியில்லாதவை செவியுணர்ச்சியே தந்து ஒழிவன.

தமிழிசைவாணர் ஒவ்வொருவரும், தாய்மொழிப் பற்றுக் கொண்டு தமிழிலேயே பாடல் வேண்டும். இதுபோது எண்ணிறந்த தமிழிசைப் பாடல்கள் உள்ளன; இன்னும் வேண்டின் வேண்டுமளவு தோன்றும். அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழிசையை வளர்த்துவரும் நெறிகள் பல. சென்னைப் பல்கலைக் கழகமும் அவ்வாறு செய்தல் வேண்டும், தமிழ்நாட்டு மாபெரும் மடங்களின் தலைவர்கள் தமிழிசையினை வளர்த்தருளல் வேண்டும். கோயில்களில் தமிழிசைப் பயிற்சி நிறுவல் வேண்டும். அதுபற்றிய சட்ட அமைப்புக்கள் இன்றியமையாதவை. திருச்சி ரேடியோ தமிழிசைக்கே உரியது; அது தன் கடமையினை உணர்ந்து அங்ஙனமே செய்து வரல் வேண்டும். சென்னை ரேடியோ தமிழிசையைப் பெரிதும் போற்றுதல் வேண்டும். கல்லூரிகளில் தமிழிசைக் கலைகளும் அவை குறித்த பட்டங்களும் அமைதல் வேண்டும். இக்கிளர்ச்சி, அரசியல், சாதி, சமயவேறுபாடு கருதுவதன்று; தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதனைப் போற்றுதல் வேண்டும். தமிழிசையினைப் போற்றி வளர்க்கும் உயர்திருவாளர்கள் செட்டிநாட்டரசர், சர். R. K. சண்முகம் செட்டியாரவர்கள் முதலிய பெரியார்கள் தமிழ் நாட்டின் பாராட்டுதலுக்குரியர். தமிழிசை வளர்ச்சி பற்றிய கருத்து வேறுபாடுகள் சில உளவாயின், அவை ஆய்ந்து ஒரு முடிபு பெறவேண்டியன என்பனவாம்.

தமிழிசை வளர்க்கும் பெரியோர்கட்கெல்லாம் நம் சங்க வாழ்த்து உரியதாகும்,

---

குறிஞ்சிப் பாட்டு

திரு. A. S. நாராயணசாமி நாயுடு அவர்கள், B.O.L.,
தலைமையாசிரியர், தமிழ்க் கல்லூரி, திருப்பதி.

(முற்றொடர்ச்சி: துணர் ௧௬, மலர் ௧, பக்கம் 9)

IV

இப் பெருங்குறிஞ்சியின் பொருளை ஒப்பரும் புலமை நிறைந்த நச்சினார்க்கினியர் நன்கு விளக்கியுள்ளார்*. அவர் பொருள் விளக்கமின்றேல் பலவிடங்கள் நமக்கு விளங்கா. ஆயினும் அவ்வுரையைப் பயிலுங்கால் எனக்கு ஆங்காங்குத் தோன்றிய சில கருத்துக்களை ஈங்குக் குறிக்கின்றேன்.

தலைவியது படரின் தன்மையைப் 'புட்பிறரறியவும் புலம்பு வந்தலைப்பவும், உட்கரந்துறையும் உய்யா அரும்படர்' எனச் சொன்னார் கபிலர். புட்பிறரறிகல், வளை கழலுதலைப் பிறரறிதல் என்கின்றனர் நச்சினார்க்கினியர். புள் என்பதற்கு வளை என்பதொரு பொருள் உளதேனும், 'வளை **கழலுதலை**' என வருவித்துரைத்தல் தக்கதோ என்று ஐயமுறுகின்றேன். புள் என்பதற்கு 'மறை' என்னும் பொருளும் உளதென்பராதலின், 'தலைவியின் மறையைப் பிறரறியவும்' என்று கொள்ளுதல் சிறப்பதோ வென்த் தோன்றுகிறது.

'உருப்பவிரமையத்து' ... அருவி, தவிர்வில் வேட்கையேந் தண்டாது **ஆடி—சுனை** குடைவுழி' என்னுமிடத்திற்கு—அருவியிலே விளையாடி, சுனையைக் குடைந்து விளையாடுகின்றவிடத்தே யென்றுரைத்தார் நச்சினார்க்கினியர்.

---

* நாவலர், பண்டிதர், ஆசிரியர். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் அப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நம்மனோர்க்கு அதனினும் தெளிவாக விளங்கத் தம் 'கபிலர்' என்னும் ஆராப்ச்சி நூலிற் குறித்துள்ளார். ஆராய்ச்சியாளர் திரு. வெ. வேங்கடராசலு ரெட்டியாரவர்கள் தம் 'கபிலர்' என்னும் ஆராய்ச்சிநூலில் சில தொடர்கட்கு வேறு பொருளமைத்து நன்கு விளக்கியிருக்கின்றார்கள்.

அருவியும் சுனையும் ஒன்றற்கொன்று எங்குள்ளன ? இதனை யெண்ணின் விழுகின்ற நீரிலே ஆடிப் பின்னர் விழுந்து நிறைவு பெற்றெழுகுகின்ற அதனடியிலுள்ள குழிச்சுனையிலே முழுகினரெனப் பொருள் தோன்றுகிறது. ஆடி—குடைந்து என்னுஞ் சொற்களை நோக்குக. ஆடுதல்—தம்மேல் நீர்விழ ஆடுதல்; குடைதல்—நீரில் முழுகுதல் என்று பொருள்படுவனவோ எனத் தோன்றுகிறது. அருவியும் சுனையும் ஒருநீரே ஓரிடத்தவே யென்று கொள்ளலே அமைவதாகும் என்று படுகிறது.

பூக்கள் பலவுஞ் சொல்லிவந்த ஆசிரியர் 'மாலங் குடைய மலிவன மறுகி' என்று கூறுழி, நச்சினார்க்கினியர், அங்கு, மாலங் குடைய என்பதற்கு அச்சாரலிடத்து மயக்கமுடையவாய் என்று பொருள் கூறி — **மலிவனம்** மறுகி என்பதற்கு '**மனவேட்கை மிக்குப்** பலகாலும் திரிந்து பறித்து' என்று பொருள்கூறினர். மலிவனம் மறுகியென்பதற்கு **நிறையச் சேர்த்தோமாய்த்** திரிந்து எனப் பொருள் கூறி, 'நிறையப் பறித்துச் சேர்த்தோமாய்ச் சுழன்று திரிந்து' என விரித்துக்கொள்ளல் பொருந்துவதென்று தோன்றுகிறது. மலிவு—வேட்கை யென்னும் பொருளதாயினும், அப்பொருள் கொள்ளின் 'மறுகி' என்பதற்குத் 'திரிந்து' என்று பொருள்கூறிப் '**பறித்து**' என ஒரு சொல் வருவிக்க வேண்டுதல் காண்க. நிறைத்தோமாய் என்று கூறி 'நிறையப் பறித்தோமாய்' என வருவித்து விரித்தல் இதனினும் அமை வுடையதோ என்பதை எண்ணல் வேண்டும்.

'மெல்லிய இனிய மேவரக் கிளந்து' என்று, தன் நாய்கட் கஞ்சிப் படரா நின்ற தலைவிக்கும் தோழிக்கும் தலைவன் கூறிய தாக ஆசிரியர் கூறுகின்றார். 'மெல்லியவாய் இனியவாய் இருக் கின்ற சொற்களை எமக்குப் பொருந்துதல் வரச்சொல்லி' என்று உரைத்தார் நச்சினார்க்கினியர். அவை யாவை என உரை யாசிரியர் விரித்திலர். தான் நாய்களோடங்குற்று அவரை அஞ்சச் செய்தமையைப் பொறுத்துக் கொள்ளுமாறு கூறிய பணிமொழி அவை' என்று உணர்தல் பொருந்துவதாதலை ஓர்க.

'கெடுதியுமுடையேன்' என்ற தலைவன், சொல்லாராதற்கு வருந்திச் 'சொல்லலும் பழியோ' என்று கேட்பதாக ஆசிரியர் கூறினார். 'எம்முடன் ஒரு வார்த்தை சொல்லலும் நுமக்குப் பழியாமோ' என்பதுரை. இவ்வொரு வார்த்தை இன்னதென உரைகாரர் கூறினரல்லர். யாம் 'காணேம்' 'அறியேம்' என்று, தான் கேட்ட கேள்விக்கு விடையாக ஒரு சொற் சொல்லுதலும் பழியோவென்று கொள்ளுதல் சிறப்பதாகும். என்னோடு பேசக்கூடாதா என இவன் அவரைக் கேட்டலினும்

'உண்டு' 'இல்லை' என்று எனக்கு மறுமொழி கூறுதலும் பழியோ வென்று குறித்துக் கூறினானென்றலே தக்கது.

களிறு புறங்கொடுத்தபின்னர்த் தலைவியின் நடுக்கங் கண்டு நுதல் நீவி 'நின் நலம் நுகர்வேன்' என்றுரைத்த தலைவன் 'நீடு நினைந் தென்முகம் நோக்கி நக்கனன்' என்று தோழியுரைப்ப தாகக் குறித்தார் ஆசிரியர். நச்சினார்க்கினியர் 'நெடுநாள் இக் கள வொழுக்கம் நிகழவேண்டுமென நினைந்து என் முகத்தைப் பார்த்துச் சிரித்தான் எனப் பொருளுரைத்தார். புதியனாகிய தான் தலைவியின் ஒரு சொல்லுங் கேளா முன்னர் 'நின் இன் பம் நுகர்வேன்' என்று கூறியதனை எண்ணித் தன்னுள் நெடு நேரம் எண்ணியிருந்து தோழியை நோக்கித் தான் நினைந்தது தோன்ற 'நகைத்தான்' என்று கொள்ளல் தக்கதென்று தோன்றுகிறது. தலைவியின் உள்ளக் குறிப்பை அறிந்து, 'மணப்பேன்' எனச் சூளுறவோடு சொல்லி மாலை துன்னுதல் கண்டு 'சின்னாள் கலங்கலொழிக—நாடறி நன்மணம் அயர்கம்' என்றும் கூறும் அவன் நகைத்தமை, விரைந்து தானறியாதே வாய்தவறிக் கூறியதும் தனக்கு மகிழ்ச்சியும் வியப்பும் அளித் ததுமான 'நின்நலம் நுகர்கு' என்றதை எண்ணியே என்று கொள்ளல் தக்கது.

அன்றுமுதல் தலைவன் இரவின் வந்து செல்லுதலைக்கூறிய தோழி, அவனை 'இளமையின் இகந்தன்றுமிலனே, வளமையிற் றன்னிலை திரிந்தன்றுமிலனே' என்று கூறுகிறாள். இளமையின் இகந்தன்றுமிலன் என்பதற்கு 'அவன்றான் இளமைப் பருவத் தைக் கடந்தது மிலன்' என்றுரைத்தார் நச்சினார்க்கினியர். தன் இளமைத் தன்மையாலே வரம்பு கடந்ததுமிலன் என்று பொருள் கொள்ளுதல் சிறந்ததோ வென்றெண்ணுக. இளமைப் பருவத்தைக் கடந்ததுமிலன் என்று குறிப்பிடுதலிற் பெருஞ் சிறப்பின்று. அது முற்கூறிய 'ஆகாண்விடையின் அணிபெற வந்தது' முதலியவற்றானே உணரப்படுதலுமறிக. இனி இவர் எவ்வாறெல்லாம் தகா ஒழுக்கம் ஒழுகினரோ என்னும் செவிலி யின் ஐயத்தை இது போக்குதலும் உளங்கொள்க.

தலைவியின் நோயைப்பற்றி 'அகலுளாங்கண் அறியுநர் வினாயும்' என்பதற்குக் கட்டினாலும் கழங்கினாலும் அறிவாரை வினவி யென்பதோடு, நோயறியும் மருத்துவரை வினாவியும் என்று சேர்த்துப் பொருளுரைத்தல் தக்கதென்று தோன்று கிறது.

(தொடரும்)

தமிழவேள் தனிமாண்பு*

திரு. வித்துவான், அன்பு கணபதி அவர்கள்.

பெரியோர்களே !

இன்று நடைபெறும் புலவர் திருவிழாவிலே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒப்பற்ற தலைவராயிருந்து, தமிழ்ப்பணி புரிந்து மறைந்த உயர்திருவாளர், செந்தமிழ்ப் புரவலர் இராவ் சாகிபு. தமிழவேள். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B. A., B. L. அவர்களைப் பற்றி, என்னைப் பேசுமாறு பணித்துள்ளார்கள். எனக்கு முன்பு பல அறிஞர்கள் இந்நூற்றுண்டில் வாழ்ந்து மறைந்த புலவர்களான பாரதியார், ஞானியரடிகள், நமசிவாய முதலியார் ஆகியோரைப் பற்றி யெல்லாம் சிறப்பாகப் பேசினர்.

தமிழவேளாம் உமாமகேசுவரர் அவர்களையும் புலவர் வரிசையிலே சேர்த்தமைக்காக இக் கழகத்தின் செயலாளரைப் பாராட்டுகின்றேன். உமாமகேசுவரர் அவர்கள் செந்தமிழ்ப் புரவலர் மட்டுமல்ல, புலவருமாக இருந்தார் என்று கூறுவேன். அன்று கண்ணுதற்பெருமான் புலவர்க்கெல்லாம் தலைவராகத் தானும் ஒரு புலவனுக இருந்து, பண்ணுறத் தெரிந்து இப்பைந் தமிழை ஆராய்ந்ததுபோல, அப் பெருமானின் திருப் பெயரைப் பெற்ற உமாமகேசுவரர் அவர்களும், கரந்தைச் சங்கத்தின் தலைவ ராக இருந்து தமிழை ஆய்ந்தார் ; வளர்த்தார். அதனுலன்றே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினரும் ஒரு சமயம் தமிழவேள் அவர்களைத் தமிழ்ப் பேராசிரியராக வந்து பணியாற்றுமாறு விரும்பி அழைத்தனர். ஆயினும் சங்க வளர்ச்சியில் பேரன்பு கொண்டு த. வே. உ. அவர்கள் அதனை ஏற்ருரில்லை. மேலும்,

---

* சென்னைத் தொண்டைமண்டல உயர்பள்ளியில் நக்கீரர் கழகச் சார்பில் நடைபெற்ற 'புலவர் திருநாளில்' சென்னை மேயர். இராவ் பகதூர் சி. தாதுலிங்க முதலியார் அவர்கள் தலைமையில் 4—4—43 ஞாயிறன்று, வித்துவான். அன்பு கணபதி அவர்கள் ஆற்றிய சொற் பொழிவு, தமிழுலகம் பத்திரிகையில் வெளிவந்தது ; அதன் ஆசிரியர் அருள் ஒப்பம் பெற்று இங்கு வெளிவருவது. விரிவுரையாளர் அன்புள் ளம் பெற்று, சிறு, சிறு மாறுதலுடன் வருவது. விரிவுரையின் முதற் கண்ணுள்ளன:—தமிழ்நாடு, தஞ்சைசில்லாக்களின் பெருமைகள்-அங்குப் பிறந்த பன்னீர்ச்செல்வம் முதலிய திருமணிகள், தமிழைப் போற்றிய தஞ்சை மன்னர்கள் பெருமைகள் ஆகிய அழகிய உரைகள். இவை, பொழிலின் சுருங்கிய நிலை குறித்து இங்கு இதுபோது விடுபட்டன.

எத்துணை வலிய கருத்தினையும் தமிழில் திறம்பட எளிதில் எழுத, பேச இயலும் என்பதைச் செயலிற் காட்டிவந்தார்.

தமிழ வேள்

தஞ்சையின் அங்கமாக உள்ள கருந்திட்டைக்குடியில், இன்று தமிழ்க் கோயிலாக விளங்குவது கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும். இதனை இற்றைக்குச் சுமார் 30 ஆண்டுகட்கு முன்பு, காலஞ் சென்ற திருவாளர். வே. இராதாகிருட்டினனார் அவர்கள் கண்டார்கள். இவர், நமது தமிழவேளாம் திரு. த. வே. உமாமகேசுவரனாரின் அன்பிற்குரிய இளவலாவார். திரு. இராதாகிருட்டினனார் சங்கத்தைக் கண்ட சில ஆண்டுகளுக்குள்ளே புகழுடம்பு உறவே, சங்கத்தின் பொறுப்பு, தமிழவேளைச் சார்ந்ததாயிற்று.

நம் தமிழவேள் அவர்கள் தஞ்சையில் சிறந்த அஃகமுடைய வேளாளர் குடியில் திரு. வேம்பப்பிள்ளை அவர்கட்கு மைந்தராக 7—5—1883-ல் தோன்றினார். வேம்பப்பிள்ளையவர்கள் உயர்ந்த குணமும் சிறந்த அறிவும் உடைய பெரியாராகவும், தஞ்சை சில்லாவில் தாசில்தாராகவும் நிலவியவர். நம் தமிழவேள், மிக்க இளமையிலேயே தம் பெற்றோரை இழந்து, சிறிய தாயாராலும், அவர் தம் கணவனார் திரு. வீ. சுப்பராயபிள்ளையவர்களாலும் அன்புடன் வளர்க்கப் பெற்றார். இவர் தஞ்சையிலேயே கல்வி பயின்று, B. A. பட்டம் பெற்றுச் சிலகாலம் 'கலெக்டர்' அலுவலகத்தில் வேலைபார்த்தார். பின்னர்ச் சட்டக் கல்லூரியிற் படித்து B. L. தேர்வில் தேறித் தஞ்சையில் வழக்கறிஞரானார். இவரது நுண்ணறிவும், திறம்படப் பேசும் வன்மையும் கட்சிக்காரர், நீதிபதிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் ஒரு தனிமதிப்பை இவருக்கு உண்டாக்கி வைத்தன.

ஐயாற்றுக் கல்லூரி

இவர் தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவராக முதலில் அரசியலாராலும் பின்னர்க் குடிமக்களாலும் குறிக்கப்பெற்றுத் தொடர்பாகப் பதினைந்து ஆண்டுகட்குமேல் அப்பதவியிலிருந்து பல நன்மைகளைச் செய்து வந்தார். தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தின் உறுப்பினராகவும், இடையிடையே தலைவராகவும் விளங்கினார். கூட்டுறவியக்கத்திற் சேர்ந்து, இன்றைய தஞ்சைத் திராவிட பாங்கு, நில அடமான பாங்கு, கூட்டுறவுப் பதிப்பகம் ஆகியவைகளைக் கண்டார். இக்காலத்தேதான் நம் பன்னீர் செல்வம் அவர்கள் தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத் தலைவ

ராக விளங்கியது. தஞ்சைச் சரபோசி மன்னன் பேரற நிலைய மாகத் திருவையாற்றிலுள்ள கல்லூரியில் வடமொழிமட்டுமே அக்காலத்தில் கற்பிக்கப்பட்டு வந்தது. நம் தமிழ வேள், சர். செல்வமவர்களுடன் சேர்ந்து முயன்றதன் பலனாக அங்குத் தமிழுக்கும் இடம்பெற முடிந்தது. தனித் தமிழ் வித்துவான் தேர்வினை உண்டாக்கித் தமிழ் வளர்த்த பெருமை காலஞ்சென்ற பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாருக்கே உண்டு. அத்தகைய மாணவர்கட்கு, அஃதாவது தனித்தமிழ் படிக்க விரும்பும் மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் பிறவுந்தந்து போற்றிய பெருமை நம் தமிழ வேளுக்கே உரியதாகும். அப் பெரியார்கள் செய்த பெரு முயற்சிதான் இன்று என்னையொத்த தமிழா சிரியர்கள் பலர் தோன்றவும், தமிழ்ப்பணி செய்யவும் இடந் தந்தது. இளம்புலவர் உலகம் இவர்கட்கு என்றும் கடப்பா டுடையது. இன்று நம் சென்னைத் தமிழ்ச் சங்கத்தினுதரவில், பன்மொழிப் புலவரும், எங்கள் தமிழ் வித்துவான் சங்கத் தலை வருமாய திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனரின் இடைவிடா ஊக்கத்தால் நடைபெற்றுவரும் தமிழ்க் கல்லூரியும், மயிலம், திருப்பதி, மேலைச்சிவபுரி, கரந்தைத் தமிழ்க் கல்லூரிகள் அக் காலத்திலில்லை. தமிழ் நாட்டில் சென்னைப் பல்கலைக் கழக வித்து வான் தேர்விற்குச் செல்ல விரும்பும் மாணவர்களைத் தயாரித் தது திருவையாற்று அரசர் கல்லூரி ஒன்றுதான். இன்றும் அக் கல்லூரியில் நூற்றுக் கணக்கான மாணவர் இலவசமாகத் தமிழ் பயின்று வருகின்றனர்.

எடுத்த பணியை இடைவிடாது செய்வதில் ஊக்கமுள்ள தமிழவேள், தம் இளவல் இராதாகிருட்டினனுருக்குப் பிறகு, கரந்தைச் சங்கத்தைப் பல்வகையில் வளம் படுத்துவாராயினர். சங்கத்திற்கென ஒரு கட்டிடத்தை வாங்கினர். அவர் மறை வதற்குச் சில வாண்டுகளின் முன்னர் ஒரு பரந்த வெளியைச் சங்கத்திற்கென வாங்கிச் சேர்த்தார். அவருடைய பெரு முயற்சி யால் தொடக்கப்பள்ளியும், மருத்துவச்சாலையும், திக்கற்ற மாணவரில்லமும் தோன்றின. சங்கக் கூட்டங்கள் நிகழும் பரந்த மண்டபத்திற்குத் தமிழ்ப் பெருமன்றம் என்று பெயரிட் டார். சங்கத்தைச் சுற்றிச் சோழன் பூங்கா, பாண்டியன் நீழல், சேரன் விளையாட்டு வெளி என, எல்லாம் தமிழாலேயே சமைத் தார். ‘தமிழ்ப் பொழில்’ என்ற உயரிய தனித் தமிழ்த் திங்கள் வெளியீட்டைச் சங்கச் சார்பில் தொடங்கித் தமிழை வளம் படுத்தினர். சங்கத்திற்குப் பல பெரியார்களை அழைத்து அவ் வப் பொழுது விரிவுரை ஆற்றச் செய்ததோடு, ஆண்டுதோறும் சங்க ஆண்டு விழாவைத் தக்காரின் தலைமையின்கீழ் மிகச் சிறப் புடன் நடத்தி வந்தார். அவ் விழாக் காலங்களில் வருகின்ற

அன்பர்கள் எவர்க்கும் எவ்வித குறையீடும் நேரா வண்ணம், எல்லா வசதிகளையும் செய்து வைப்பதோடு தாமே நேரில் வந்து ஒவ்வொருவருடனும் தனித்தனி அளவளாவுவார்.

தமிழவேள் குண நலங்கள்

இத்தகைய குண நலங்களையுடைய பெரியாராகிய இவர் இடைக்காலத்திலேயே தம் மனைவியை இழந்தார். பின்னர் பஞ்சாபகேசன் என்ற அறிவின் கொழுந்தாம் அருமை மகனை இழந்தார். அது முதல் தமிழ்ப் பணியிலேயே இவர் காலத்தை யெல்லாம் கழித்தார். தாம் தொடங்கிய திக்கற்ற மாணவ ரில்லத்திலிருந்த 50 பேருக்கு மேற்பட்ட மாணவர்களைத் தனித் தனி யறிந்து, அன்புடன் தம் குழந்தைகளெனப் பேணி வளர்த் தார்; கல்வி யூட்டினார்.

தமிழவேளின் வடிவத்தை ஒரு தனித் திருவுருவம் என்ன லாம். இவரது பரந்த மார்பும், புன்முறுவலோடு கூடிய முகமும் எல்லோரையும் கவருவன. தூய எளிய ஆடையினை யுடையவர். எப்பொழுதும் திருநீற்றுப் பொலிவுடன் விளங்கு பவர். எவருடனும் இன்பமாகப் பேசுபவர். யாரிடத்திலும், தாம் உண்மை என்று நம்பியதை அஞ்சாது கூறும் ஆண்மை யுள்ளவர். சமயப் பற்றும், தமிழ்ப் பற்றும் மிகுந்தவர். செந் தமிழைப் புரப்பவர். அதனாலன்றோ ஞானியாரடிகள் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது, இவரைச் 'செந் தமிழ்ப் புரவலர்' எனப் பட்டம் தந்து சிறப்பித்தனர். இவர் நடத்திய சங்கத்தின் 25-வது ஆண்டு நிறைவு விழாவாகிய 'வெள்ளிவிழா'விலே மறைத்திரு ஞானியாரடிகள் தலைமை தாங்கினார்கள். வந்திருந்த தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ்ப் பெரியார்களின் விருப்பத்திற் கிணங்க, ஞானியாரடிகள் மீண்டும் 'தமிழ வேள்' என்ற பட்டத்தை யளித்து இவரைப் பாராட்டி னார். இவரது நாட்டுத் தொண்டினை நன்கறிந்த அரசியலாரும் இவருக்கு 'இராவ் சாகிபு' என்ற பட்டத்தை யளித்தனர்.

தமிழவேளும் செல்வமும்

இவர் அரசியலி லீடுபட்டு அரும்பணிகள் பல புரிந்தவர். பல ஆண்டுகள் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் உறுப்பினராக இருந்து தமிழுக்குப் பற்பல பணிகளைப் புரிந் துள்ளார். சர் செல்வம் அவர்களிடம் அளவற்ற அன்புடைய வர். இந்திய மந்திரியின் அறிவுரையாளராகச் சென்ற செல்வம் அவர்களின் விமானம் மறைந்தது; செல்வத்தை ஓமான் கடல்

உண்டது என்ற செய்தி கேட்டு இவர் உளம் ஒடிந்தார். சில காலங்கட்குப் பிறகே, அந்தத் தாக்குதலினின்றும் ஒருவாறு உளம் உடல் தேறி மீண்டார். நான்கு ஆண்டுகட்கு முன்பு தமிழ் மொழிக்கு வந்த இன்னலை அஞ்சாது எதிர்த்தார். வீரவுரை பகர்ந்து தமிழர்களை ஊக்கினர். 1938-ல் இதுபற்றிக் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்திலே தமிழவேள் ஆற்றிய வீர வுரை இன்னும் என் செவிகளிலே ஒலிக்கின்றன!

கரந்தைக் கல்லூரி

இரண்டாண்டுகட்கு முன்பு சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் நடந்த தமிழர் மத மாநாட்டில் வந்து திறப்புரை யாற்றிய காலை அவருடைய சிறந்த பேச்சைப் பலரும் கேட்டிருப்பர். அக்காலை என்னைத் தனியே கண்ட தமிழவேள், தம் அருகழைத்து அணைத்து 'நலமுடனிருக்கின்றீர்களா?' என்று அன்புடன், தமக்கு என்றுமுள்ள புன்முறுவலுடன் கேட்டார். தமிழ்ப் புலவர்கள் தமிழில் மட்டுமன்று, பிற எல்லாத் துறைகளிலும் வல்லவர்களாக இருக்க வேண்டும், அவ்வாறு அவர்களை ஆக்க வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டவர் தமிழவேள். அதற்கென சங்கத்தின் வெள்ளி விழாவில், திரு. ஞானியாரடிகளைக் கொண்டு 'தமிழ்ப் புலவர் கல்லூரி' யொன்றைச் சங்க ஆதரவில் தொடங்கினர். பெரிதும் முயன்று செல்வத்தைத் தேடி, கல்லூரிக்கு அரசியலாரின் ஒப்பு தலையும் பெற்றார். 'இக் கல்லூரி வழியாக என் கருத்துப்படி வரும் முதல் வித்துவானைப் பார்க்கவேண்டும்' என்ற தணியாத ஆவலைக் கொண்டிருந்தார். ஆனல், அவர் ஆசை நிறைவேறு வதற்கு முன்னே அவர் மறைந்தார்.

வடநாட்டுச் செலவு

தமிழவேள் 1941 ஏப்பிரலில் வடநாட்டைச் சுற்றிப்பார்க்கத் தம் நண்பர் திரு. அ. கணபதிப் பிள்ளையவர்களுடன் புறப்பட்டார். இடையில் சென்னையில் சிலநாள் தங்கி, சங்க ஆக்கத்திற்கு வேண்டிய பணிகளைத் தலைவர்களுடன் கலந்து செய்து சென்றார். இவர் வடநாடு செல்ல நினைந்ததன் முதன் நோக்கம், அங்குள்ள பல்கலைக் கழகங்களையும், மக்கள் முன்னேற்றம், மொழி முன்னேற்றம் என்றிவற்றிற்குப் பாடுபட்டு வரும் நிலையங்கள் ஆகியவற்றையும் நேரிற் கண்டு வந்து, தம் கரந்தைச் சங்கத்தைப் பல வழிகளிலும் வளர்க்க வேண்டும் என்பதே. இவ்வாறு வடநாடு சென்றவர் கல்கத்தாவில் சிலநாள் தங்கினர். அங்குத் தமிழ் மாண்பு குறித்துப் பல சொற்பொழிகள் நிகழ்த்தி

ஞர். உலகம் போற்றும் சாந்தி நிகேதனத்தை நேரிற்கண்டு, கவி இரவீந்திரரின் செயல்களை வியந்தார். கயாவுக்குச் சென்றார். காசியை யடைந்தார். கங்கையில் நீராடி, கங்கை நீர் கொண்டும், மலர் கொண்டும் காசி விசுவநாதனையும் விசாலாட்சியையும் வழிபட்டார். காசி இந்துப் பல்கலைக் கழகத்தைக் கண்டார். சாரநாதம் சென்று போதி முனிவனும் புத்தர் பெருமானைக் கண்டு தொழுதார். பிரயாகையில் நீராடி, அரித்துவாரம் செல்ல அன்பர் கணபதிப்பிள்ளையவர்களுடன் வண்டி யேறினார். இடையில் சிறிது காய்ச்சல்கண்டது. அயோத்தியின் அருகாமையிலுள்ள 'பைசாபாத்' நிலையத்தில் புகைவண்டியைவிட்டு இறங்கினர். அங்கிருந்த குறைசி மருத்துவ நிலையத்தில் 2 தினங்கள் தங்கி, மருந்து பால் முதலியவற்றைக் கடைசிவரை அருந்தி வந்தார். மே 9-ந் தேதி மாலை 3 மணிக்குச் சிறிதுதுயிலேற்றார். கடைசிவரை அன்பர் கணபதிப் பிள்ளையவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாராம். அந்தோ! 3-50—மணிக்கு எவ்வித வருத்தமுமின்றி இவ்வுலகை நீத்தார். உடனே, பிள்ளையவர்கள் தமிழவேளின் தமிழுடலைச் சரயு நதியின் கரையில், தசரதனுக்கு இறுதிக்கடன் நடந்த அதே இடத்தில், அங்கியங் கடவுளுக்களித்து இறுதிக்கடனியற்றினர். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராம்' தமிழவேள் 58-ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். தமிழவேள் பிரிந்தார் என்ற செய்தி தமிழ்நாட்டையே துயர்க்கடலுள் ஆழ்த்தியது. தமிழ்ப் புலவர் புலம்பினர்.

இரங்கல்

தமிழவேள் மறைவு குறித்துப் புலவர் பாடிய சில பாடல்களை ஈங்கெடுத்துக் காட்டுவேன் :

"கங்கைநறும் புனல்படிந்து காசிவிசுவ
நாதனொடு கலந்து தோன்றும்
மங்கைவிசா லாட்சியையு மனமுருகிக்
காண்டலுமே மகிழ்ந்து நின்னை
இங்குவர விட்டிலரோ! தமிழ்பயிலா
வடநாட்டி லிருத்த லானே
அங்கிருத்திக் கொண்டனரோ! தமிழ்ச்சுவையில்
அவர்க்கிருந்த ஆர்வம் என்னே!"

—மகாமகோபாத்தியாயர்-பண்டிதமணியார்.

"கெம்பீரத் திருவுருவம் என்று காண்பேன்!
கிளர்ச்சிதரும் வீரவுரை என்று கேட்பேன்!
செம்பாகத் தமிழ்பேசிச் சிரிப்புக் காட்டிச்
சிந்தையினைப் பறிக்குமுகம் என்று பார்ப்பேன்!
கொம்பாகத் தமிழ்க்கொடிமேற் படர நின்ற
குரிசிலே என்றலைவா! உமாம கேசா!
நம்பாதென் மனமே நீ மறைந்த செய்தி
நல்லிசையின் உருக்கொண்டு நிற்கின் றுயே!"

—சாமி. சிதம்பரனுர்.

இனி, தமிழவேள், வடநாடு செல்லப் புறப்படுவதன் முன்னுள் நடந்த திருநாவுக்கரசர் திருநாளில் பல புலவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு, ஆங்கு வழங்கிய திருநீற்றை வாங்கி அணிந்துகொண்டு, புறப்பட்டார். அன்று கயிலை காணச்சென்ற நாவரசர் மீண்டதாகச் சரிதம் கூறும். ஆனுல், அவ்வாறே வடநாடு சென்ற நம் தமிழவேள் மீண்டாரில்லை. இதைத்தான், பண்டிதர் நாவலர் நாட்டாரவர்கள்,

"திருநாவுக் சரசன்றன் பெருமையினைச்
சிறியரேம் பேசக் கேட்டே
உருகாநின் றரசனைய தோற்றமுடன்
உலகநா யகனைக் காணப்
பெருகார்வ முடன்சென்ற பெரியோய்! நின்
பெரும்பிரிவு கருதா தீண்டு
வருநாளை யிரவுபக லெண்ணியே
மதியற்ருேம் மாழாந் தோமே!"

என்று கனிந்து கூறினுர்கள்.

இப்பொழுது யான் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நுழையும் போதெல்லாம்,

"சங்கமுதல் வாயிலிலே, தளிராலின்
நிழலகத்தே, சார்ந்த மன்றம்
அங்கங்காம் அவற்றகத்தே, ஆற்றிடத்தே,
அகல்வெளியாம் ஆங்கே, மற்றும்
எங்கணுநீ நிற்கின்ருய், இருக்கின்ருய்,
இயல்கின்ருய், எளியேம் பாலே
பொங்கினிய மொழிகின்ருய்! பொற்புடைய
தலைவ! இவை பொய்யோ! மெய்யோ!"

என்று எங்கள் ஆசிரியராம் கரந்தைக் கவியரசு, திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் பாடிய பாடலை என் நா என்னையறியாதே கூறுகின்றது.

கரந்தைச் சங்கம்—வேண்டுகோள்

இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து பெரியார் இராவ்சாகிபு திருவாளர். ஐ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் சங்கத்தை நன்றாக நடத்துகின்றார்கள். சங்கத்தை யொட்டிய தொடக்கப்பள்ளி 'இராதா கிருட்டினனார் தொடக்கப்பள்ளி' எனவும், நடுநிலைப் பள்ளி 'உமாமகேசுவரனார் நடுநிலைப் பள்ளி' எனவும், தமிழ்க்கல்லூரி 'கரந்தைப் புலவர் கல்லூரி' எனவும் பெயர் பெற்று விளங்குகின்றன. ஐயாற்று அரசர் கல்லூரியினின்றும் ஓய்வுபெற்ற எங்கள் அருமை ஆசிரியராம் கரந்தைக் கவியரசர், R வேங்கடாசலம்பிள்ளையவர்கள் தமிழ்ப் பொழில், கல்லூரிகளின் ஆசிரியராகத் தொண்டாற்றி வருகின்றார். கல்லூரித் தலைவராகப் பேராசிரியர் நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மிளிர்கின்றார். சங்கத்தின் அலுவல்களை, தலைவர், அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்கள், சங்கப் பேரன்பர்கள் திரு. அ. கணபதிபிள்ளையவர்கள் முதலிய நிறைவேற்று கழகத்தினர் நன்கு நடத்தி வருகின்றார்கள். ஆயினும் எல்லா வகையிலும், பொருள் முட்டுப்பாடு ஏற்படாது இச் சங்கத்தை வளர்ப்பது தமிழ் மக்களின் நீங்காக் கடனாகும்.

இறுதியில் என்னுடைய மதிப்பிற்குரிய பெரியாரும்' தமிழிளைஞர்தம் தனித்தளபதியுமான திருச்சி திரு. கி. ஆ. பெ, விசுவநாதம் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளை உங்கட்குத் தெரிவித்து, அதனை முற்றிலும் ஒப்பி இதனை முடித்துக் கொள்கிறேன். "பறந்து மறைந்த பன்னீர் செல்வத்தைப் பின்பற்றி ஊர்ந்து மறைந்தார் உமாமகேசுவரர் எனக்கூறவேண்டியதாயிற்று. அது அவர்களின் நட்பின் பிணைப்பை நன்கு விளக்கிக் காட்டுகிறது. எனினும், பொதுவாகத் தமிழ்நாடு, சிறப்பாகத் தஞ்சை சில்லா தமது இருபெருந் தலைவர்களையும் அடுத்தடுத்து, உடலொடும் உயிரோடும் காணவிடத்திற் பறிகொடுத்துப் பரதவிப்பது பெரிதும் வருந்தத்தக்கதேயாகும். காலமல்லாக் காலத்தில் கரந்தை மன்னன் மறைந்த மறைவினால் கண்ணீர் உகுத்துக் கலங்கி வருந்தும் தமிழ்மக்கள் அனைவரும் நல்லாறுதல் பெற வேண்டிக்கொள்கிறேன். அதனோடு அவர்கள் விட்டுப் போன வேலைகளைத் தொடர்ந்து நடத்தி அவர்களின் நல்லெண்ணத்தை நிறைவேற்றி வைப்பதும் அவர்களின் உருவச்சிலை ஒன்றைச் சங்கக் கூடத்தின் முன்னிலையில் நினைவுக்குறியாக நிலைநிறுத்தி வைப்பதுமாகிய இரண்டும் இக்காலத்தில் செய்ய வேண்டிய தமிழ்ப் பெருமக்களின் நீங்காக்கடமைகளாகும் என்பதையும் வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்."

தமிழ்த்தாய் வாழ்க.

மாடலன் என்னும் மாமறை முதல்வன்

திரு. K. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், B.A., B.L. தஞ்சாவூர்.

இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் புரந்த பண்டை மன்னர்கள், இத் தமிழகத்தை நீதிவழுவா நெறிமுறையிற் புரந்த தன்மையும், அவர் தம் விழுப்பமிக்க வாழ்க்கை நலன்களும், அன்னாரைப் பாடிய முத்தமிழ்த் துறையின் முற்றப் போகிய முதுபுலவர் பெருமக்களின் வாய்ச்சொற்களால் நன்கறியப்படும். அறவழி நின்றொழுகிய பண்டைப் பாவலர்கள், ஒரு நாட்டின் நாகரிகச் சிறப்புக்களாகிய கல்விப் பெருக்கமும் கலைவளர்ச்சியும் மக்கள் வாழ்க்கை முன்னேற்றமும் இன்னோரன்ன பிறவும் அந்நாட்டு அரசியலையே அடுத்திருக்கின்றன வென்பதை யுன்னி. மன்னர்களை நண்ணி, அவர்களுக்கு அருந் துணையாய் வைகினர். மன்னர்களும், வள்ளல்களும், பிறதமிழ்ச் செல்வர்களும், அவர்கள்பாற் சீர்த்த கல்வியும், கூர்த்த அறிவும், நல்லொழுக்கமும் நிலைபெற்றிருத்தலையோர்ந்து, அவர்களுக்கு வரிசை பலநல்கி மகிழ்வித்தும், அப் புலவர்களிற் சிலரைத் தமக்கு உறுதுணையாக உடன்கொண்டு வாழ்வித்தும், அவர்கள் தாய்மொழியினை வளம்படுக்கப் பாடும் நலங்கனிந்த பாக்களைக் கேட்டு மகிழ்ந்தும், செவி யறிவுறூக்களால் நல்வழிப் பட்டும் சீரும் சிறப்பும் உற்று மேம்பட்டனர். பண்டைப் பெருவேந்தர்கள், கூர்த்த மதிவளமும் மனநலனு மிகுந்த புலவர்களை இங்ஙனம் மிக்க அன்பொடு போற்றி வருவராயினும், அப்புலவர்கள்

> ‘இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்’
>
> ‘செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
> கவிகைக்கீழ்த் தங்கு முலகு’

என்பவற்றிற்கேற்ப, அம் மன்னர்தம் செங்கோல் வழுவுநிலை எய்துமிடத்தும், அவர்கள் தம் நாடு நன்னிலையுற்று வளம்பெருக வேண்டுவன இயற்றுது சோருமிடத்தும், நாட்டின்கண் அமைதியினை நாட்ட வேண்டுமிடத்தும், அவர்களுக்கு நிலையாமையினைக் காட்டி மேனெறி புகட்டுமிடத்தும், அவர்கள் வெகுளிவாய்ப் பட்ட அமையங்களிலும் அஞ்சாது, அவர்களுக்கு நல்லறிவு கொளுத்திவருவாராயினர். இத்தகைய பல்கேள்வித் துறை போகிய பண்டைத் தொல்லாணைப் புலவர்களது மன நலனையும், புலனழுக்கற்ற நற்குண மேன்மையையும், கல்வி உலகமும்,

பெருவேந்தர்களும் அவர்கட்கு அளித்திருந்த தனிப்பெருமையினையும், பன்னலங்கெழுமிய அவர்கள் தம் பாக்களே நன்கு விளக்குவன.

இங்ஙனம் திகழும் நல்லிசைப் புலவர்களின் வாய்மையின் வழித்தாய மனநலத்தானும், உள்ள ஒருமையின் வலியானும் மேம்பட்டுப்பொலிவுற்று நின்றவர் மாடலனென்பவர். இவர் பண்டைப் புலவர் பத்தியில் வைத்தெண்ணப் படாதவராயினும் நற்றமிழ் நக்கீரர், மறுவில் வாய்மொழி வள்ளுவர் முதலானார் போன்று தெய்வப்புலமை வாய்ந்தவராவர், இவர், தமிழகம் போற்றும் கடவுட் பத்தினியாகிய கண்ணகிக்குக் கல் நடவேண்டிக் கங்கைப் பேரியாற்றங்கரை கடந்து, இமையத்திலிருந்து கற்கொண்டுவந்த நற்றமிழ் வேந்தனாகிய சேரன் செங்குட்டுவன் காலத்தவர். இவர் பாடிய பாக்கள் காணப்பெறுவாயினும், ஓராறு புறப்பாக்கள் பாடிய 'கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார்' போன்று ஆன்றவிந்தடங்கிய கொள்கையினையுடைய விளங்கு புகழ்த் தமிழ்ச் சான்றோர் குடியில் தோன்றியவரெனத் துணியப் படும். இவரது வரலாற்றை மெய்ப்படவுணர்ந்த பெரும் புலமை வாய்ந்த பெரியார் இளங்கோவடிகள், 'நான்மறை முற்றிய நலம்புகு கொள்கை மாமறை முதல்வன்' எனவும் 'குறையாக் கேள்வியன்' எனவும் இவரைப் புகழ்ந்திருப்பதனானே, இம் மாடலனார் மயர்வறு மதி நலம் வாய்க்கப் பெற்ற தமிழகத்துச் சான்றோரெனத் துணியப்படும். மாடலனார் மணவாழ்வு வாய்க்கப் பெற்றவரா, அன்றித்தவவாழ்வினை மேற்கொண்டவரா என்பது புலப்படவில்லை. இவர் தம் வரலாறு தெளிவாக நம்மால் அறியக்கூடவில்லையாயினும், இம் மாடல மாமறையோர் விழுக்குடிப்பிறந்த ஒழுக்கமுடைய கோவலனுக்கு உழுவல் அன்பினராய்த், தென்னவர்க்குரிய மதுரை மூதூரில் வதிந்தவரென்பது சிலப்பதிகார மென்ற பெருங்காப்பியத்தால் உணரப் படும்.

தவப்பெரியாராகிய இளங்கோவடிகள் மறுவற்ற மனத்தினராகிய மாடலனாரைப் பற்றிக் கூறுங்கால், இவரது உள்ளத்தின் அழகை மிக வியந்து, இவர்பால் நெகிழாத பேரன்புடையவராயிருந்தன ரென்பது புலப்படும். நல்லியல்பும் சொல்வன்மையுமுடைய தூய்மையரை நல்லியல்பும் நற்செய்கையும் வாய்ந்த நல்லோர் விரும்புவது புதுமையன்று. உயர்ந்த துறைகளிலே நிற்கும் மாடலனார், மறை நான்கினையும் மற்றும் பலகலைகளையும் ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தவர்; கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மையர்; களங்கம் சிறிதும் இல்லாதவர்; உற்றது கூறும் உயரிய கொள்கையினர்; அஞ்சாத நெஞ்சத்தவர்;

எடுத்தகாரியத்தை எளிதிற் செய்யும் ஆற்றலமைந்த பெருமை யினையுடையார்; உலகின் நிலையாமை யுணர்ந்து அதற்கேற்ப ஒழுகும் ஒழுக்கத்தில் விழுப்பமுடையவர்; நீதி நெறியின் மாறு படாத நீர்மையர்; நல்லனவும் தீயனவும் நாடிப் பிறர்க்கு பயன் படுத்தும் வகையினை நவைதீரச் சொல்லும் திறலுடையவர். இங்ஙனம் அறமும் அருமறையுமுணர்ந்து உள்ள ஒருமையின் வலியால் மேம்பட்ட முனிபுங்கவராகிய மாடலனாரது நல்லொ ழுக்கத்தின் மேன்மையினை அருண்மிக்க பெரும்புலவராய இளங் கோவடிகள் தம் பெருங்காப்பியத்தில் புகழ்ந்துரைப்பதனான், அம் மாடலனார் தம் புலமையும் பொன்றாப்புகழும் அறிந் துணரும் பான்மையவாயின.

மறை வல்லோராகிய இம் மாடலனார் ஐம்புலன்களால் விளையும் மயக்கினை நீக்கித் தவமெனும் செல்வத்தை அடைய விரும்பிய தவ முனிவர். இவர் உலகின்கண் ணுள்ள உயிர் களனைத்தும் அறியாமையிற் கிடந்து துன்பத்திற் சுழலுதலை ஒழித்து, நிலையான கடவுளரின் நீக்கமில் பேரின்ப ஆக்கத்தைப் பெறுதற்கு வந்திருக்கின்றன எனவும், அக்கடவுளுக்கு உரிமை யான உயிர்களிடத்தும், உலகத்துப் பொருள்களிடத்தும் அன்பு வைத்தொழுகல் இனிதெனவும், பற்றுவைத்தொழுகல் சாலவும் தீதெனவும் கருதி, இச்சைகளையெல்லாம் துறந்தவர். மற்றும் இவர் புறம்பேயுள்ள உலகியற் பொருள்களில் மனத்தினை ஓடவிடாது, என்றும் உணர்வுக்குணர்வாய் விளங்கும் இறை வனது திருவருளை நாடி அவரைத் தொழுதற் பொருட்டே இறைவன் உறையும் இடங்கள் பலவும் செல்வாராயினர். இவ் வாறே அருளுருவராயும் பேரறிவுடையவராயும் வாழ்வார்க்கு வயப்படாத மக்கள் யாருமிலராதலால், இளங்கோவடிகள் மாடலனாரைப் போற்றியது இறும்பூதன்று.

இறைவனது திருவருளில் இடைவிடாது தமதறிவைத் தோய்த்து அதனை நோக்கியவாறே மண்ணுர்ந்த பதி பலவும் மகிழ்தரு மன்பால் வணங்கிச் செல்லும் மாடலனார், இமயப் பனிவரையின் அண்மையிருந்த காலத்து, இறைமுறை நன் கறிந்த செங்குட்டுவன் தன்சினவேற்றானையுடன், பிறர் நெஞ்சு புகாப் பெருந்தகைமை வாய்ந்த கற்புடைய மகள் கண்ணகிக்கு இமயத்தினின்றும் சிலையினையெடுப்பித்து, அச்சிலையினைக், கனன் றெழுந்த கனக விசயர்தம் கதிர்முடி மேலேற்றிக் கங்கைக் கரை யகம் புகுந்து, மறைவல்ல சான்றோரால், பத்தினிச்சிலையினை கங்கையில் முறைப்படி நீராட்டச் செய்தனன். பின்னர் ஆரிய மன்னர் அழகுறவமைத்த மணிமண்டபத்தில், வீற்றிருந்து, வீரங்காட்டித் திகழ்ந்த மறவர்களுக்கு வாகைப் பெருங்கலம் பல

பெருநாளமயம் பிறக்கிடக் கொடுத்தான். இன்னணம் பேரிசையுடன் பனம் பூவைத் தும்பையொடு முடித்து பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன், தன்னரசிருக்கையில் வீற்றிருக்கும் காலத்து, அருந்தவத்து அந்தணாளராகிய மாடலமறையோர் 'எங்கோவே! வாழ்க' வென ஆசிகூறிச் சிலப்பதிகாரக் கதையையே, பொருட்பயன் நிரம்பி விளங்கும் சொற்களாற் சுருங்க எடுத்துக் கூறுவானெண்ணி,

....' மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது! முதுநீர் ஞாலம்
அடிப்படுத் தாண்ட அரசே வாழ்க" என்றனர்.

இங்கு நம் மாடலனார் கூறியது சேரமன்னனது பெருமை! சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம்! இது அம்மன்னனுக்கும் அங்கிருந்த அரசர்களுக்கும் விளக்கம் தரவில்லை, வியப்பினைத் தந்தது. அது கேட்ட அரசன்,

'பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறங் கூறினை நான்மறை யாள!
யாது நீ கூறிய உரைப் பொருள் என்றான்.

உடனே மாடலனார் தன் கூற்றின் பொருளை

கானலந் தண்டுறைக் கடல்விளை யாட்டினுள்
மாதவி மடந்தை வரிநவில் பாணியோடு
ஊடற் காலத்து ஊழ்வினை உருத்தெழக்
கூடாது பிரிந்து குலக்கொடி தன்னுடன்
மாட மூதூர் மதுரை புக்காங்கு
இலைத்தார் வேந்தன் எழில்வான் எய்தக்
கொலைக்களம் பட்ட கோவலன் மனைவி
குடவர் கோவே நின்னாடு புகுந்து
வடதிசை மன்னர் மணிமுடி ஏறினள்'

என்று விரித்துரைத்தனர். இந்த இடம் ஒன்றே நம் மாடலனார் மதிநுட்பம் வாய்ந்த உரைத்திறனைப் புலப்படக் காட்டப் போதியதன்றோ! இங்ஙனமே மாடலனார் மதிநுட்ப உரைகளாக வரும் வேறு சில இடங்களையும் பின்னர்க் காண்பாம்.

(தொடரும்)